# முதலாம் தவணைப் பரீட்சை – 2020

## கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்

## தரம் - 10

**பாடம் : சங்கீதம்** | **நேரம் : 3 மணி** | **சுட்டெண்:**

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

1. காந்தர்வ வேதம் என அழைக்கப்படுவது.

   1. சித்திரம்  2. நடனம்  3. ஓவியம்  4. சங்கீதம்

2. அப்பியாச கானத்திற்கும், சபாகானத்திற்கும் பொதுவான இசை உருப்படி.

   1. பதம்  2. வர்ணம்  3. கீதம்  4. ஜதீஸ்வரம்

3. நாயகன் நாயகி பாவத்தை வெளிப்படுத்தும் இசை உருப்படி

   1. தில்லானா  2. பதம்  3. இராகமாளிகை  4. ஸ்வரஜதி

4. வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றில் பயன்படுத்தப்படும் இசைக்கருவி.

   1. ஹார்மோனியம்  2. வயலின்  3. வீணை  4. புல்லாங்குழல்

5. கண்ட ஜாதி அடதாளத்தின் அங்க அடையாளம்.

   1. $1_3 1_3 00$  2. $1_5 1_5 00$  3. $1_7 1_7 00$  4. $1_2 1_2 00$

6. அலங்காரம் ஒன்றை முதலாம் காலத்தில் பாடும்போது எடுத்துக்கொள்ளும் ஆவர்த்தனங்களின் எண்ணிக்கை.

   1. 5  2. 8  3. 10  4. 15

7. “சிவபெருமானே...” என்ற சஞ்சாரி கீதம் அமைந்த இராகம்.

   1. மோகனம்  2. ஆரபி  3. மத்தியமாவதி  4. சங்கராபரணம்

8. ரிரி மம பப நிநி என்ற ஸ்வரப் பகுதியின் ஸாகித்தியம்

   1. அமரர் பணியும்  2. உமைமணவாளா  3. அம்புயத்தாளா  4. சிவபெருமானே

9. “உற்றுமை சேர்வது...” என்ற தேவாரத்தின் பண்

   1. பஞ்சமம்  2. பழம்பஞ்சுரம்  3. புறநீர்மை  4. செந்துருத்தி

10. திருவிசைப்பா பாடப்படும் இராகம்

    1. ஆனந்தபைரவி  2. மோகனம்  3. ஆரபி  4. மத்தியமாவதி

11. பின்வருவனவற்றுள் சபாகான இசை உருப்படி.

    1. கீதம்  2. கீர்த்தனை  3. ஜதீஸ்வரம்  4. அலங்காரம்

12. அன்னிய ஸ்வரத்தை எடுத்துக்கொள்ளும் இராகம்.

    1. உபாங்கராகம்  2. பாஷாங்கராகம்  3. வர்ஜராகம்  4. வக்ரராகம்

13. தைவதாந்திய இராகத்திற்கு உதாரணம்

    1. நவரோஜ்  2. நாதநாமக்கிரியை  3. மோகனம்  4. குறிஞ்சி

14. ஜனகராகங்களின் மொத்த எண்ணிக்கை

    1. 12  2. 78  3. 72  4. 40

15. 8 ஆவது மேளகர்த்தா இராகமாவது.

1. கல்யாணி 2. மோகனம் 3. மத்தியமாவதி 4. தோடி

16. “சங்கீத அளவுகோல்” எனச் சிறப்பிக்கப்படும் இசைக் கருவி.

1. வயலின் 2. மிருதங்கம் 3. புல்லாங்குழல் 4. வீணை

17. வீணையில் காணப்படும் மீட்டும் தந்திகளின் எண்ணிக்கை.

1. 04 2. 20 3. 24 4. 28

18. வீணை வாத்தியத்தில் உள்ள மெட்டுக்களின் எண்ணிக்கை.

1. 10 2. 20 3. 24 4. 28

19. அப்பியாசகாண வகை இசை உருப்படிகளை இயற்றியவர்

1. முத்துத் தாண்டவர் 2. புரந்தரதாஸர் 3. தீட்சிதர் 4. சுந்தரர்

20. திரியாங்கங்களின் எண்ணிக்கையில் மாற்றமடையும் அங்கம்.

1. லகு 2. துருதம் 3. அனுதுருதம் 4. ப்லுதம்

21. தமிழ்நாடு கலைவளம் பெற்று விளங்கிய காலப்பகுதி.

1. சங்க காலம் 2. சங்கமருவிய காலம் 3. பல்லவர் காலம் 4. சோழர்காலம்

22. 12 திருமுறைகளைத் தொகுப்பித்தவர்.

1. நம்பியாண்டார் நம்பி 2. இராஜராஜசோழன் 3. மகேந்திரவர்மன் 4. நின்றசீர் நெடுமாறன்

23. “முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்...” என்ற பாடலைப் பாடியவர்.

1. திருநாவுக்கரசர் 2. திருஞானசம்பந்தர் 3. சுந்தரர் 4. தீட்சிதர்

24. திருவாசகத்தை அருளியவர்.

1. சுந்தரர் 2. மாணிக்கவாசகர் 3. அப்பர் 4. சம்பந்தர்

25. “விசித்திர சித்த...” என்ற விருதினைப் பெற்ற மன்னன்

1. இராஜராஜசோழன் 2. மனுநீதிச் சோழன் 3. காசியப்பன் 4. மகேந்திரவர்மன்

26. பஞ்சபுராணம் ஓதும்போது மூன்றாவதாகப் பாடப்படுவது.

1. திருவாசகம் 2. திருவிசைப்பா 3. திருப்பல்லாண்டு 4. புராணம்

27. திருவாசகம் பாடப்படும் இராகம்

1. ஆரபி 2. மோகனம் 3. மத்தியமாவதி 4. சங்கராபரணம்

28. ஆதி தாளத்தின் மொத்த அட்சரங்கள்.

1. 04 2. 05 3. 10 4. 08

29. அடதாளத்தில் வரும் முதல் லகுவை நீக்கினால் வரும் தாளம்.

1. திரிபுடை தாளம் 2. துருவதாளம் 3. ஜம்பைதாளம் 4. அடதாளம்

30. திரியாங்கங்களையும் எடுத்துக்கொள்ளும் தாளம்.

1. துருவதாளம் 2. ஏகதாளம் 3. ரூபகதாளம் 4. ஜம்பைதாளம்

31. பின்வருவனவற்றுள் பேதமடையும் ஸ்வரங்கள்

1. ரி 2. ரிகமதநி 3. ஸப 4. நிஸ்

32. முத்துத்தாண்டவர் வாழ்ந்த காலப்பகுதி.

1. 15 ஆம் நூற்றாண்டு　2. 17 ஆம் நூற்றாண்டு　3. 18 ஆம் நூற்றாண்டு　4. 16 ஆம் நூற்றாண்டு

33. "பூலோக கைலாச கிரி..." என்ற பாடலைப் பாடியவர்

1. தீட்சிதர்　2. சுந்தரர்　3. முத்துத்தாண்டவர்　4. மணிவாசகர்

34. முத்துத்தாண்டவர் பாடிய "பேசாதே நெஞ்சமே..." என்ற பாடல் அமைந்த இராகம்.

1. பவப்பிரியா　2. சூர்யகாந்தம்　3. மோகனம்　4. கல்யாணி

35. பேரின்ப பதங்களை இயற்றியவர்.

1. புரந்தரதாஸர்　2. முத்துத்தாண்டவர்　3. தியாகராஜர்　4. பிச்சையப்பா

36. 12 ஸ்வரதானங்களில் நான்காவது ஸ்வரதானம்

1. சாதாரண காந்தாரம்　2. சுத்தமத்திமம்　3. பஞ்சமம்　4. சுத்தரிஷபம்

37. நாட்டியக் கச்சேரியில் இரண்டாவதாக இடம்பெறும் இசை உருப்படி

1. தில்லானா　2. ஜதீஸ்வரம்　3. பதம்　4. வர்ணம்

38. இசை பயிலும் மாணவர்களுக்கு விருத்தியாகும் பண்புகளில் ஒன்று.

1. பொறாமை　2. கோபம்　3. பொறுமை　4. இரக்கமின்மை

39. தனியே ஸ்வரக்கோர்வைகளால் ஆக்கப்பட்ட இசை உருப்படி.

1. ஸ்வரஜதி　2. கீதம்　3. வர்ணம்　4. ஜதீஸ்வரம்

40. சுருதியின் மறுபெயர்.

1. கேள்வி　2. கோவை　3. நாதம்　4. ரிதம்

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1. 29 ஆவது மேளகர்த்தா இராகம் எது? அவ் இராகம் ஹிந்துஸ்தானி இசையில் எவ்வாறு அழைக்கப்படும்.

2. சப்த ஸ்வரங்களில் பேதமடையாத ஸ்வரங்கள் எத்தனை? அவை எவை?

3. திருவாசகத்தை அருளியவர் யார்?

4. அப்பியாச கானத்திற்கும், சபா கானத்திற்கும் பொதுவான இசை உருப்படி எது?

5. மாயாமாளவ கௌளை இராகத்திற்குரிய பண் எது?

6. ஆதி தாளத்தில் வரும் அங்கங்களைத் தருக?

7. தாளத்தின் முதல் மூன்று அங்கங்களும் எவ்வாறு அழைக்கப்படும்.

8. சந்தப் பாவலர் என போற்றப்படுபவர் யார்?

9. “பெருமாளே” என முடியும் இசை உருப்படி எது?

10. மாத்ருக்கா பதங்கள் இடம்பெறும் இசை உருப்படி எது? (12 புள்ளி)

**02. சிறுகுறிப்பு எழுதுக.**

1. உபாங்கராகம்
2. பாஷாலிக இராகம்
3. வர்ஜராகம்
4. நிஷாதாந்திய இராகம் (12 புள்ளி)

**03.** தோடி இராகத்தின் இலட்சணத்தை உருப்படிகள் ஸ்வர சஞ்சாரம் என்பவற்றுடன் விளக்குக. (12 புள்ளி)

**04.** 1. “சங்கீத அளவுகோல்” எனச் சிறப்பிக்கப்படும் இசைக்கருவி எது?

2. இவ் இசைக்கருவியின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக?

3. அவ் இசைக்கருவியின் அமைப்பை விளக்குக?

4. அவ் இசைக்கருவி சுருதி சேர்க்கும் முறையைத் தருக?

5. வீணை வாசித்துப் பிரபல்யம் அடைந்த இரு கலைஞர்களின் பெயர்களைத் தருக.

(1+5+2+2+2 = 12 புள்ளி)

**05.** இந்தியாவில் 7ஆம் 8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க.

(12 புள்ளி)

**06.** முத்துத் தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் இசைக்கு ஆற்றிய பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

1. பிறந்த இடம்
2. இளமைக் காலம்
3. எதிர்பாராத சம்பவமும், புதுவாழ்வும்
4. இவரது உருப்படிகளும், சிறப்புக்களும். (1+5+2+2+2 = 12 புள்ளி)

**07.** நீர் பார்த்து இரசித்த வில்லுப்பாட்டு நிகழ்வொன்றைப் பற்றி விரிவாக எழுதுக.

(12 புள்ளி)